# உள்ளக இடப்பெயர்வு அடைந்த சிறுவர்களுக்கு ஏற்பட்ட சமூக உளநலப் பாதிப்புக்கள்.

(மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு)

13

பதிவெண்: EU / IS / 2003 / AC / 153

சுட்டெண் : 2303

LIBRARY
30 OCT 2009
Eastern University, Sri Lanka.

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் சமூக விஞ்ஞானத் துறையில் மெய்யியல் விசேட கற்கை நெறியை பூர்த்திசெய்யும் பொருட்டு இவ் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

FAC13
Project Report
Library - EUSL

சமூக விஞ்ஞானத்துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2009

PROCESSED
Main Library, EUSL

முன்னுரை

வன்முறைச் சம்பவங்கள், அப்பட்டமான மனித உரிமைகள் மீறல் மற்றும் துன்பியல் நிகழ்வுகளினால் தமது சொந்த நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்க்கப்பட்டவர்களை பாதுகாப்பது இன்றைய பாரிய – கடுமையான சவாலாகும். உள்நாட்டில் இடம்பெயர்க்கப்படும் நிலை, குடும்பங்களினதும் சமுதாயத்தினதும் மீது நாசகாரமான தாக்கத்தை கொண்டிருப்பதுடன் அனைத்துக்கும் மேலாக அப்பாவி மக்களின் உணவு, உடை, குடியிருப்பு, மருத்துவ வசதிகள் பாதிப்பதுடன் கடுமையான உளத்தாக்கங்களுக்கும் உள்ளாகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்கால உலகில் இடப்பெயர்வு என்பது தவிர்க்கப்படமுடியாத ஒன்றாக பரிணமித்துள்ளது. அதாவது எல்லோராலும் பேசப்படுகின்றதும், சிந்திக்கப்படுகின்றதுமான எண்ணக்கருவாக இடப்பெயர்வு பற்றிய சிந்தனை சமகாலத்தில் விளங்குகினறது. இடப்பெயர்வினால் ஏற்படும் பாதிப்புக்களை சரிசெய்து கொள்வதற்கான நடவடிக்கைகளும் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டாலும், இடப்பெயர்வுக்குள்ளான பிறகும் மக்கள் பாரிய கொடுமைகளுக்குள்ளாக நடத்தப்படுகின்றார்கள் என்பது உண்மையாகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் நடத்தப்படவேண்டிய விதம் பற்றி வழிகாட்டல் கொள்கைகள் காணப்பட்டாலும் அதற்கமைவாக சமகாலத்தில் செயற்பாடு இல்லை. வழிகாட்டல் கோட்பாடுகள் உடன்படிக்கைகளைப்போன்று எத்தரப்பினரையும் கட்டுப்படுத்தும் சட்ட வடிவத்தை கொண்டதல்லவெனினும் தர்க்க ரீதியாக அவைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டம், மனிதாபிமானச்சட்டம், என்பனவற்றின் அடிப்படையில் மக்கள் பாதுகாக்கப்படவேண்டியது இன்றியமையாதது ஆகும்.

வளர்ந்தவர்களை விட சிறுவர்கள் இவ் இடப்பெயர்வினால் கணிசமான அளவு சமூக உளநலப்பாதிப்புக்குள்ளாகின்றார்கள். இதனை பெரிதாக யாரும் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் இத்தாக்கங்கள் வளர்ந்து வரும் சமூகத்தினரிடையே மாறாத மனவடுவை ஏற்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லை. எனவே ஆரம்பத்திலே இத்தாக்கங்களை அவர்களிடமிருந்து களைந்து விடுவது அவசியமானதாகும்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் விசேட தேவைகளுக்குரியவர்கள், சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த்தியதுடன் எல்லா பிரச்சினையும் முடிந்து விட்டது என ஒருபோதும் கருதக்கூடாது. மண்முனை மேற்கு சிறுவர்கள் இடப்பெயர்வுக்குள்ளாகி மீள்குடியேற்றம் அடைந்து தற்போது சொந்த இடங்களில் வாழ்ந்தாலும் அவர்களிடமிருந்து பாதிப்பு கறைகள் அகலாததினால் அவர்கள் இப்போதும் சமூக உளநலப்பாதிப்படைந்து இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு தகுந்த நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு அவர்களது எதிர்காலம் கட்டியெழுப்பப்பட வேண்டியது அனைவரினதும் கடப்பாடாகும்.

எனவே எனது ஆய்வானது உள்ளக இடப்பெயர்வு அடைந்த சிறுவர்களுக்கு ஏற்பட்ட சமூக உளநலப்பாதிப்புக்களை தெளிவுபடுத்தும் பொருட்டு அமைந்துள்ளது. முதலாவது ஆய்விற்கான அறிமுகம் கூறப்பட்டுள்ளது, இரண்டாவது மூன்றாவது அத்தியாயங்கள் முறையே பொதுவாக இடப்பெயர்வு தொடர்பானதும், மண்முனைமேற்கில் இடப்பெயர்வு தொடர்பானதுமான தகவல்களைத் தருவதாக அமைந்துள்ளது. நான்காவது அத்தியாயம் சமூக உளநலம் தொடர்பான அறிமுகத்தைவிளக்குகின்றது. ஐந்தாம் அத்தியாயத்தில் களஆய்வு மூலம் கிடைத்த தகவல்கள் அதாவது மண்முனை மேற்கு பிரதேச சிறுவர்களது உளநலப் பாதிப்பு தொடர்பானதாக இவ் அத்தியாயம் அமைந்துள்ளது. இறுதி அத்தியாயத்தில் தீர்வுகளும் ஆலோசனைகளும் கூறப்பட்டுள்ளது. மேற்படி எனது ஆய்வானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

## பொருளடக்கம்


நன்றியுரை

உறுதியுரை

முன்னுரை

பக்கம்

அத்தியாயம் ஒன்று..........................................................................1-5

1.1 ஆய்வின் அறிமுகம்

1.2 ஆய்வின் நோக்கம்

1.3 ஆய்வுப் பிரச்சினை

1.4 ஆய்வுக் கருதுகோள்

1.5 ஆய்வு மூலங்கள்

1.6 ஆய்வு வரையறை

அத்தியாயம் இரண்டு..........................................................................6-33

2.0 இடப்பெயர்வும் அதன் வகைகளும்.

2.1 இடப்பெயர்வுக்கான அறிமுகம்

2.1.1 இடப்பெயர்வு வரலாற்று ரீதியான ஓர் பார்வை

2.1.2 இடப்பெயர்வை ஏற்படுத்தும் காரணிகள்

2.2 இடப்பெயர்வுக் கோட்பாடு

2.3 இடப்பெயர்வு வகைகள்

2.3.1 உள்ளக இடப்பெயர்வு

2.3.2 சர்வதேச இடப்பெயர்வு

2.3.3 பலவந்த இடப்பெயர்வின் வகைகள்

2.3.4 பலவந்தமாக புலம்பெயர்ந்தவர்களின் வகைகள்

அத்தியாயம் மூன்று..........................................................................34-46

3.0 மட்டக்களப்பில் ஏற்பட்ட இடப்பெயர்வும், மண்முனை மேற்கு செயலகப் பிரிவில் ஏற்பட்ட .இடப்பெயர்வும் ஓர் வரலாற்று நோக்கு.

3.1 மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையும்.

3.2 மண்முனை மேற்கு பிரதேசம் - ஓர் அறிமுகம்.
3.2.1 மண்முனை மேற்கு பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள்

அத்தியாயம் நான்கு..........................................................................................47-66

4.0 சமூக உளநலக்காப்பீடு ஓர் அறிமுகம்.
4.1 உளம் தொடர்பான ஆய்வும் அதன் பின்னணியும்.
4.1.1 உளநலவியல் ஓர் அறிமுகம்.

4.2 சமூக உளநலம் ஓர் அறிமுகம்
4.2.1 சமூக உளநலப் பண்புகள்.
4.2.2 சமூக உளநலம் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள்
4.2.3 சமூக உளநலம் பாதிப்படைந்தவரின் இயல்புகள்.
4.2.4 சமூக உளநலப் பொருத்தக்கேடு.

4.3 குழந்தைகளின் உளநல வளர்ச்சி
4.3.1 சமூக உளநலத் தேவைகள்

4.4.1 பிராய்ட்டின் உளப்பகுப்புக் கொள்கை
4.4.2 ஊக்கலும் தேவைகளும்
4.4.2.1 மக்டுவலின் இயல்பூக்க கொள்கை
4.4.2.2 மாஸ்லோவின் தேவைக்கொள்கை

4.5 உளநெருக்கீடு
4.5.1 உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முறைகள்.
4.5.1.1 ஆற்றுப்படுத்துதல்
4.5.1.2 சீரமியம் அல்லது உளவளத்துணை
4.5.1.3 சாந்த வழிமுறைகள்

அத்தியாயம் ஐந்து.............................................................67-80

5.0 உள்ளக இடப்பெயர்வினால் சிறுவர்களுக்கு ஏற்படும் சமூக உளநலத்தாக்கங்கள்.

5.1 உடனடித்தாக்கங்கள்

5.2 காலம் தாழ்த்திய தாக்கங்கள்

5.3 நீண்ட நாட்களுக்கு பிறகு ஏற்படும் தாக்கங்கள்.

அத்தியாயம் ஆறு.............................................................81-91

6.1 கருதுகோள் பரிசீலனை.

6.2 தீர்வுகளும் பரிகாரங்களும்.

6.2 முடிவுரை.

பின்னிணைப்பில்.........

அ. உள்ளக இடப்பெயர்வு தொடர்பான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டல் கொள்கைகள்.

ஆ. உசாத்துணை நூல்கள்.

இ. களஆய்வில் தகவல் தந்தோர்.

ஈ. நேர்காணலின்போது..